Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2023**

INSERT **1 hour 30 minutes**

*1755596882-I*

**INFORMATION**
- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

NL 317614/3
© UCLES 2023



https://xtremepape.rs/

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–12** on the Question Paper.

விமலனுக்கும் கவிதாவுக்கும் மூன்று வயதில் பாலர் வகுப்புக்குச் செல்லும் ஒரு பெண்பிள்ளையுடனும் தொழிலுடனும் வாழ்க்கை ஓய்வில்லாததாக இருந்தது. விமலன் தலைநகரத்தின் மத்தியில் வங்கியொன்றில் முக்கிய பதவி வகித்து வந்தான். கவிதா அவர்களது மகளின் பாடசாலையிலேயே உதவி ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்தாள்.

கவிதா தனது மகளின் பாடசாலையிலேயே தொழில் புரிவதால் மகளைப் பாடசாலைக்குக் கொண்டு செல்வதும் மீண்டும் பாடசாலை நிறைவடைந்ததும் வீட்டுக்கு அவளை அழைத்துச் செல்வதும் இலகுவாக இருந்தது. பாடசாலை விடுமுறை நாட்களில் மகளுடன் கவிதா நேரத்தைச் செலவழிப்பதற்கும் அது உதவி புரிந்தது. அவள் வீட்டுக்கு முன்னால் இருக்கும் பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஐந்து தரிப்பிடங்கள் தூரத்தில் அந்தப் பாடசாலை இருப்பதால், அவள் மகளுடன் பேருந்தில் தொழிலுக்குச் செல்வது வழக்கமாக இருந்தது.

விமலன் எப்போதும் இரயிலில் நகரத்தின் மத்திக்கு பயணப்படுவதை விரும்பினான். வாகன நெருக்கத்தைத் தவிர்ப்பதற்கும், வாகனம் ஓட்டுவதனால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் இது அவனுக்கு உதவியது. கவிதாவும் விமலனும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் அவர்கள் எப்போதும் தமக்கெனப் பிரத்தியேக வாகனத்தை வைத்திருக்க விரும்பவில்லை.

வார இறுதி நாட்களில் இருவருமாக மகளுடன் அருகிலுள்ள சந்தைக்கு நடந்து சென்று அடுத்த வாரச் சமையலுக்குத் தேவையான பொருட்களை வேண்டி வருவார்கள். சந்தையில் கடைகளை வேடிக்கை பார்ப்பதையும், பல நிற மின் விளக்குகளைப் பார்ப்பதையும், அங்கிருக்கும் சிறிய இராட்டினங்களில் விளையாடுவதையும் அவர்களது மகள் மிகவும் விரும்பினாள். சில சமயங்களில் சந்தைக்கு அருகில் உள்ள பூங்காவுக்கு அவர்கள் எல்லோருமாகச் சென்று விளையாடுவார்கள்.

சில வருடங்கள் கழிந்தன. தற்போது விமலனதும் கவிதாவினதும் மகளுக்கு எட்டு வயதாகின்றது. அவர்களுக்கு ஒரு மகன் நான்கு வயதில் உள்ளான். பிள்ளைகளின் வேலை கவிதாவுக்கு முன்னரிலும் பார்க்க அதிகமாக இருந்தது. அவள் தொழில் புரியும் பாடசாலை மகளிருக்கு மட்டும் உரியது என்ற காரணத்தினால், மகனைத் தான் தொழில் புரியும் பாடசாலையிலேயே அவளால் சேர்க்க முடியவில்லை. அருகிலிருந்த மற்றுமொரு பாடசாலையில் அவனைக் கவிதா சேர்த்தாள்.

ஆனால், பேருந்தில் சென்று மகனைப் பாடசாலையில் இறக்கிவிட்டு தானும் மகளுமாக மற்றைய பாடசாலைக்குச் செல்வதில் கவிதா சிரமங்களை எதிர்நோக்கினாள். காலை நேரம் மிகுந்த சன நெருக்கடியான நேரமாக இருந்ததால் அவள் நேரம் தவறி வேலைக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது. அத்துடன்,



https://xtremepape.rs/

பிள்ளைகள் பாடசாலைக்கு எடுத்துச் செல்லவேண்டிய பொருட்கள் எதையேனும் காலை அவசரத்தில் மறக்க வேண்டியும் இருந்தது.

பிள்ளைகள் இருவரும் வளர்ந்து விட்டதால் உணவுப் பொருட்களின் தேவையும் அவர்களுக்கு அதிகரித்தது. இதனால், வார இறுதி நாட்களில் அவர்கள் செல்லும் சந்தைக்கான பயணமும் சிரமம் மிக்கதாக அமையத் தொடங்கியது. பல்வேறு பொருட்களையும் கைகளில் சுமந்துகொண்டு வீடு திரும்புவது, பல மணி நேரங்களை எடுத்தது. அத்துடன், பிள்ளைகள் சந்தையில் காணும் தேவையற்ற பல பொருட்களிலும் விருப்பம் கொண்டு அவற்றை வேண்டித் தரும்படி கேட்கத் தொடங்கினார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் தீர்வு காணும் முகமாக, விமலன் சிறியதொரு பிரத்தியேக வாகனத்தைக் கவிதாவுக்கு வேண்டிக் கொடுத்தான். இது பிள்ளைகளுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்ததோடு கவிதாவின் நேர ஒழுங்குக்கும் உதவுவதாக இருந்தது. பிள்ளைகளைக் கவிதாவுடன் பூங்காவில் இறக்கிவிட்டு விமலன் தனியாக சந்தைக்குச் சென்று அனைத்துப் பொருட்களையும் வேண்டி வருவதற்கும் இது பெரு உதவி புரிந்தது.

© UCLES 2023

https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/